# சம்மாந்துறை பிரதேச சபையின் 17 வது கூட்டறிக்கை 2019.07.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 17 ஆவது அமர்வு 2019.07.09 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. திரு. எஸ். கருணாகரன் | உள்ளூராட்சி உதவியாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 17 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

நமது கௌரவ உறுப்பினர் ILM.மாஹிர் அவர்கள் இன்றய சபைக் கூட்டத்திற்கு வருகைதர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு லீவு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கிழக்கு மாகாணத்திற்கு புதிதாக ஆளுனராக நியமிக்கிப்பட்டிருக்கும் கௌரவ சால் விஜயலால்டி சில்வா முன்னாள் தென் மாகாணத்தின் முதல் அமைச்சர், உள்ளூராட்சியிலும் மாகாண சபையிலும் அனுபவம் கொண்டவர். அவரை எமது சபை சார்பிலும், எமது ஊரின் மக்கள் சார்பிலும் வரவேற்று அவரின் சேவைக்காலத்தில் நாமும் எமது மக்களும் பயன் பெறுவோம் என்ற நம்பிக்கையில் அவரை வாழ்த்தியவனாக,

சென்றவாரம் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் இயக்குனர் வருடாந்த பொதுக்கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அதற்கு எமது நாட்டில் இருக்கும் சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் பங்குபற்றுவார்கள். அதில் இந்த வருட தலைவராக என்னை பிரேரித்திருந்தார்கள். அதேவேளை தலைவர்கள் மத்தியில் 04 முறை சபையின் அங்கத்தவராக இருந்து இம்முறை மகர பிரதேச சபையின் தவிசாளராக பெண்மனி இருப்பதனாலும் எமது சரித்திரத்தில் முதல் தடவையாக பெண் பிரதிநிதித்துவம் உள்ளூராட்சி சபைகளில் உறுதிப்படுத்தப்பட்டதனால் நான் அவ்விடத்தை அப் பெண்மனிக்கு விட்டுக்கொடுத்து சரித்திரத்தில் எமது உள்ளூராட்சி ஒன்றியத்தின் தலைவியாக மகர பிரதேச சபையின் தவிசாளர் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் விட்டுக்கொடுத்ததனால் தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வருடத்திற்குள் நிர்வாகம் செய்வதில் உள்ள குறைபாடுகள் அதாவது கிண்ணியா நகர சபையில் 30 இற்கும் மேற்பட்ட உப விதிகள் நடைமுறையில் இருக்கின்றது. ஆனால் எமது சபைகளை பொறுத்தவரையில் அவைகள் மிகவும் குறைவாகவே உள்ளது. அக் குறைபாடுகளை நிரப்புவதற்கு அவர்களின் திறமைகளை கருத்தில் கொண்டு ஏனைய சபைகளுக்கு நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுப்பதுடன் சில வேளைகளில் வெளிநாட்டு அனுபவங்களை பெறுவதற்கு அங்கத்தவர்களுக்கு அந் நிறுவனத்தின் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

முன்னாள் உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் HMM.ஹரீஸ் அவர்கள் சம்மாந்துறை அமிர் அலி பொது நூலக மலசலகூடம், சேதனப் பசளை தயாரிக்கும் நிலைய அலுவலகம், உக்கும் கழிவுகளை சேகரிப்பதற்கு பிளாஸ்டிக் கூடைகளை வீடுகளுக்கு வழங்குவதற்கான நிதியீட்டினை செய்வதாக அறிவித்துள்ளார். அவருக்கு எமது சபை சார்பிலும் சம்மாந்துறை மக்கள் சார்பிலும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தீர்மானம் 02**

முன்னாள் மாகாண சபைகள் மற்றும் இராஜாங்க அமைச்சர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் HMM.ஹரீஸ் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட கீழ்வரும் வேலைத்திட்டங்களுக்கான மதிப்பீட்டறிக்கைகளை அனுப்பிவைப்பதற்கும், அதனை அந்தந்த பிரதேசத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையங்களுக்கு வழங்கி அமுல்படுத்துவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

**வேலைகளின் விபரங்கள்**

01. Purchase and Provide Garbage Bins for Households
02. Const. of Toilet Block of Ameer Ali Library
03. Const. of Composed Yard Office and Washroom

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

குடியிருக்கும் பகுதிகளில் செங்கல் சூளைகளை வைத்திருப்பது பாரிய சவாலாக உள்ளது. ஒரு காலகட்டத்தில் சமீட்புரம், உடங்கா, கல்லரிச்சல் வீதிகளின் அருகில் குடியிருப்புக்கள் இல்லாத காரணத்தினால் செங்கல் தொழில் செய்து கொண்டிருந்தனர். ஆனால் இன்று மக்கள் குடியேற ஆரம்பித்ததும் அவை பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. அதாவது அதில் உள்ள சட்டப் பிரச்சினை என்னவென்றால் அக்காணிகள் அனைத்தும் குடியிருப்புக் காணிகளாக பேமிட் வழங்கப்பட்டுள்ளது. அதில் ஏதாவது தொழில் செய்வதானால் அவர்கள் அதனை பதிவு செய்து கொள்ள வேண்டும். ஆனால் மக்கள் அவ்வாறு செய்வதில்லை. அதற்கு எதிராக ஏதாவது முறைப்பாடுகள் வந்தால் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியாது. இதனால் இவை பாரிய சவாலாக உள்ளது. உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களினாலும் இவர்களுக்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று எமது சபைக்கு எழுத்து மூலம் கேட்டுள்ளார். அதனால் எமது சபை ஒரு சட்டத்தரணியை நியமித்து அவர்கள் அதனை அகற்றாத காரணத்தினால் அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

'றன் மாவத்தை' திட்டத்தின் கீழ் சில பாதைகள் தற்போது துரிதமாக காபட் போடப்படுகின்றது. சிலர் அவர்களது அதிகாரத்தினை அல்லது செல்வாக்கினை கொண்டு சில மாற்றங்கள் செய்ய முயற்சிக்கின்றனர். இதன் மூலம் பல வீதிகளில் பல சர்ச்சைகள் எழுவதற்கு காரணமாகவும் அமைகின்றது. அதாவது வடிகானினை எவரும் மூடக்கூடாது. அதன் மூலமாக எந்தவகையிலும் வடிகான்கள் மூடப்படக்கூடாது என்றும், கொங்கிறீட் பாதைகள் இருந்தால் அல்லது தார் ஊற்றப்பட்ட பாதைகள் இருந்தால் அதற்கு மேல் அதே அளவு காபட் இடலாமே தவிர அதில் மாற்றங்கள் செய்வதானால் பிரதேச சபையுடன் எழுத்து மூலமான ஒப்பந்தம் இருக்க வேண்டும். என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் காபட் இடப்படுவதற்கு முன் அதன் Surface சரியாக பதனிடப்பட்டுள்ளதா என்பதனை கௌரவ உறுப்பினர்கள் அவதானிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எவர் வீதிகள் செப்பனிட்டாலும் வடிகான் என்பது எமது சபையின் பராமரிப்பிற்குட்பட்டது. எனவே, இவ்வாறான வீதிகள் போடப்படுகின்ற போது அந்த பிரதேசத்தில் உள்ளவர்களுடன் கௌரவ தவிசாளர் அவர்கள் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக முதலாம் குறுக்குத் தெருவில் நான் பிறந்து வளர்ந்த இடம். அதற்கு அடுத்த வீதி பிலாவடி லேனில் நான் திருமணம் முடித்த வீடு. இவ்வாறு இருக்கும் போது அவ் வீதிக்கு காபட் இடுவது சம்பந்தமாக எனக்கு எந்தவிதமான அறிவித்தலும் கிடைக்கவில்லை. ஆனால் பிரச்சினை ஒன்று வந்த போது 05 மாதத்திற்கு முன் இது தொடர்பாக பிரதேச சபையிற்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்கள். கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களிடம் அதன் பிரதி இருப்பதாகவும் கூறப்பட்டது. எமக்கு இது தொடர்பாக எதுவும் தெரியாது. கானில் எந்தப்

பிரச்சினையும் இல்லை என்று தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதில் பிரச்சினைகள் வரும் போது மக்கள் எங்களிடம் கேட்கும் போது மிகவும் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் அவர்கள் 05ம் மாதம் 17ம் திகதி கடிதம் ஒன்று எமது சபைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
றன் மாவத்தை வீதிகள் தொடர்பான அறிவித்தல் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து ஓரிரு கிழமைக்கு முன்னர்தான் வந்தது. அவைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இணைந்து செய்வது என்பதனால் நானும் அதில் கலந்து கொள்ளவில்லை. அதனால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து அவ் வீதிகளை இவ்வாறுதான் செப்பனிட வேண்டும் என்று கலந்துரையாடிய பின்னரே ஆரம்பிக்கப்பட்டது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதைகளை செப்பனிட ஆரம்பிப்பதற்கு முன் எம்மிடம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தால் நிச்சயமாக அதில் உள்ள குறைகளை நீக்கி அதன் பின் மதிப்பீட்டறிக்கை தயாரித்திருக்கலாம். ஆனால் றன் மாவத் திட்டத்தில் அது சம்பந்தமான விடயங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு எந்தவோர் அதிகாரமும் இல்லாமல் மத்திய அரசினால் சகல வேலைத்திட்டங்களும் இடம்பெறுகின்றது.

I Road Project ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இதில் மக்களின் எதிர்ப்புக்கள் இருந்தால் எந்தத்திட்டத்தையும் அமுல்படுத்த முடியாது. எனவே இதில் கௌரவ உறுப்பினர்கள் தூரநோக்குடன் பொது நலத்தை நோக்கி செயற்படவேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் பல திட்டங்களை கொண்டு வந்து மக்களுக்காக செயற்படுகின்ற போதும் சிலர் படித்த அரச தொழிலில் இருக்கும் பெரியவர்கள் கூட சட்டவிரோதமான கட்டடங்களை கட்டுகின்றனர். இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது ஊரில் பாரிய சவாலாக இருப்பது சட்டவிரோதமான கட்டடங்களாகும். இதனை மக்களே உணர வேண்டும். சிலர் சிரேஸ்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைத்து சட்டங்களும் அறிந்தவர்களும் இவ்வாறான செயல்களை செய்கின்றனர். நாம் எழுத்து மூலம் வேலைகளை நிறுத்தும்படி அறிவித்தல் கொடுத்தாலும் அவர்கள் அச்செயலை செய்து கொண்டே இருக்கின்றனர்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அனைவரும் அறிந்த விடயம் என்னவென்றால் எமது சபை அமைந்திருக்கின்ற வீதிக்கு அருகில் அமைந்திருக்கின்ற சட்ட விரோதமாக கராச் கட்டுவதற்கு நாட்டப்பட்ட கம்பியினை எமது சபையின் முன்னாள் செயலாளர் சலீம் அவர்கள் அவ்விடத்திற்குச் சென்று அதனை தடுத்து நிறுத்தினார். இதேபோன்று முன்னாள் கௌரவ தவிசாளர் இப்றாஹிம் அவர்களது காலத்திலும் சுப்பிரின்தர் என்பவரின் மதில் உடைக்கப்பட்டு இன்றும் உதாரணமான அடையாளமாக இருக்கின்றது. அவ்வாறான அதிகாரம் எம்மிடம் இருக்கும் போது நாம் யாராக இருந்தாலும் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் யாருக்கும் சரியான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதனால்தான் இன்று வரை சட்டவிரோதமான கட்டடத்தை கட்டுவதற்கு காரணமாக அமைகின்றது. இவைகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டால் எமது

சபை பக்கச்சார்பாக நடக்கின்றது என்று ஏழை மக்கள் குறிப்பிடுவர். இதன் மூலம் எமது சபைக்கே அவப்பெயர்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் 99 வீதமான வேலைகள் இவ்வாறே இடம்பெறுகின்றது. எனவே இனிவரும் காலங்களில் எந்தவிதமான விட்டுக்கொடுப்பும் இல்லாமல் யாராக இருந்தாலும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**கௌரவ உறுப்பினர் வை.பி.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊரைச் சேர்ந்த ஒரு நபர் 03வது மாடி கட்டுவதற்கு நாம் அனுமதி வழங்கவில்லை. அவர்கூட எமது சபை பக்கச்சார்பாக நடக்கின்றது என்றே கூறுகின்றார். இதே விடயத்தை ஓர் ஏழை மகன் செய்தால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனால் மக்கள் எமது சபையை பக்கச்சார்பாக நடக்கின்ற சபையாக கருதுவதனால் இவைகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது எனது பலவீனமல்ல. கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் குறிப்பிட்ட நபருக்கு 03 வது மாடி கட்டுவதற்கு சபையினால் அனுமதி வழங்க முடியாது. UDA யிடம் அனுமதி பெற வேண்டும். ஆனால் அதுவும் அனுமதி கொடுக்காது காரணம் அவரது கட்டடத்தின் பரப்பளவு போதாது.

**தீர்மானம் 03**
கட்டடங்கள், கடையறைகள் போன்றவற்றை நிர்மாணிக்கும் போது எமது பிரதேச சபையின் அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம். முஸம்மில் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது சபையின் நடவடிக்கைகள் இந்நிலையில் இருப்பதற்கு காரணம் நிர்வாகப் பிரச்சினை. அதாவது கூட்டு முயற்சியின்மை. எமது சபையில் பெண் ஊழியர்கள் அதிகமாக இருக்கின்றனர். அவர்களால் வெளியில் சென்று முறைப்பாடுகள் சம்மந்தமான வெளிக்கள வேலைகளைச் செய்வது பாரிய சவாலாக உள்ளது. இது பற்றி நான் உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமும் கூறியுள்ளேன். ஆண் ஊழியர்களில் உள்ளூராட்சி உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை தவிர அதிகாரம் உள்ளவர்கள் எவரும் எமது சபையில் இல்லை. இதனால் சபையினை சீராக கொண்டு செல்வதில் பாரிய சவாலாக உள்ளது. தற்போது 04 பிரச்சினைகளை சட்டத்தரணியிடம் பாரம் கொடுத்துள்ளோம். எனவே இனிவரும் காலங்களில் அனைத்து விடயங்களுக்கும் சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**தீர்மானம் 04**
சென்ற மாதம் 2019.06.03 தொடக்கம் 2019.06.28 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது சபையில் அனுபவம் உள்ள நிதி உதவியாளர் இல்லாததனால் பல குறைபாடுகள் உள்ளது. அதாவது வகை மாற்றங்கள், வரவு செலவுத் திட்டம் போன்றவற்றுடன் ஒவ்வொரு வருட கணக்காய்வுகள் ஐயவினாவுக்குட்படுகின்றது. 2013ம் ஆண்டு இறுதிக் கணக்கறிக்கை தயாரிக்கின்ற போது 2010ம் ஆண்டு கணக்கறிக்கையில் இருந்து வந்த மிகுதிகளை உள்வாங்கி செய்ததினால் பாரிய பிரச்சினை உள்ளது. அதனை எமது சபையில் உள்ள உத்தியோகத்தரினால் தீர்க்க முடியாது. காரணம் அவர்களுக்கு அனுபவம் போதாது. அதனால் நன்கு அனுபவம் உள்ள 02 கணக்காளர்களை கொடுப்பனவுடன் நியமித்து அவைகளை தீர்க்க வேண்டும். கௌரவ உறுப்பினர்கள் அனுபவம் உள்ள கணக்காளர்கள் தெரிந்திருந்தால் குறிப்பிடலாம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நன்கு அனுபவம் உள்ள கணக்காளர் ஒருவரை தற்போது நியமிப்போம். மேலதிகமாக தேவைப்பட்டால் எதிர்வரும் மாதத்தில் சபையில் அனுமதி பெற்று நியமிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் காரைதீவைச் சேர்ந்த திரு கேந்திர மூர்த்தி என்பவர் மிகவும் அனுபவம் உள்ளவர். அவரை நியமித்தால் இப் பிரச்சினைகளை இலகுவாக தீர்த்து வைப்பார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முதலில் ஒருவரை நியமிப்போம் பின்னர் மற்றவரை தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் 05**
எமது பிரதேச சபைக்குரிய 2013 இறுதிக்கணக்கு தாயாரிக்கப்படுகையில் அறவிடப்பட முடியாத நிலுவைகள் பல விடயங்களில் காட்டப்பட்ட காரணத்தினால், அந்நிலுவைத் தொகைகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டின் இறுதிக்கணக்கிலும் காட்டப்படுவதால், கணக்காய்வு ஐய வினாவிற்கு உட்படுகின்றது. இதனை சீராக்கி பதிவழிப்பதற்கான நடவடிக்கைகளில் கணக்குகளை சீராக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அத்துறையில் நிபுணத்துவம் உள்ள ஒருவரை கொடுப்பனவுடன் நியமிக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சிமுஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது சபைக்கு சொந்தமான 04 முன்பள்ளிப் பாடசாலைகளில் 02 பாடசாலைகளை தவிர மற்றயவைகளில் கடமையாற்றுபவர்கள் பதிலீட்டு வேலைத் தொழிலாளியாகத்தான் நியமிக்கப்பட்டு ஆசிரியராக கடமையாற்றுகின்றார்கள். அவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களாக நியமிக்கப்பட மாட்டார்கள் காரணம் அதற்குரிய ஆளணி எம்மிடம் இல்லை. அது மாகாண சபைக்கு பொறுப்பானது. அந்தவகையில் அல் இஹ்சான் பாலர் பாடசாலையில் கடமையாற்றும் ஊழியர் ஆசிரியர் நியமனம் பெற்று சென்றுள்ளதனால் அதற்கு 02 வேலைத் தொழிலாளிகள் தேவை அதனால் வழமை போல் பள்ளிவாசல்கள், கோயில்களில் அறிவித்தல் கொடுத்து வேலைத் தொழிலாளியாக நியமித்து ஆசிரியராக கடமையாற்ற தெரிவு செய்ய வேண்டும்.

**தீர்மானம் 06**

அல் இஹ்சான் பாலர் பாடசாலையில் வேலைத் தொழிலாளியாக கடமையாற்றியவர் (ஆசிரியர்) கடந்த 28.06.2019 ஆம் திகதி முதல் ஆசிரியர் நியமனம் பெற்று சென்றுள்ளதால் அப்பாடசாலைக்கு வேலைத் தொழிலாளியாக இருவரை நியமிக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**தீர்மானம் 07**

தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிற்சி பெற்ற பயிலுனர்களை பயிற்சியாளர்களாக நியமிப்பதற்கும், ஏலவே பயிற்சி பெற்று வரும் பயிலுனர்களுக்கு 03 மாதங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபா.300 அடிப்படையில் கொடுப்பனவு வழங்குவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஹிஜ்றா பொதுச் சந்தையில் இயங்கிவரும் இல 02 இறைச்சிக்கடை ஏலவே குத்தகைக்குப் பெற்றவர் அவரது வைப்புப் பணத்தை மீளக் கோரியுள்ளார். நாம் சென்ற சபையில் சபைக்கு நட்டமில்லாமல் அவரது எஞ்சிய பணத்தை வழங்குவதற்கு தீர்மானித்திருந்தோம். அக்கணக்கின்படி 06 மாத பணம் 12 இலட்சம் ரூபா செலுத்தியிருந்தார். 02 மாதம் கடை நடாத்தியுள்ளார். பின் 02 மாதம் கடை மூடியிருந்தது. 1,017,040 ரூபாவில் எஞ்சிய தொகை 182,959 ரூபாவை கொடுப்பதனால் நமது தொகை சபைக்கு வரும்.

**தீர்மானம் 08**

எமது சபைக்குச் சொந்தமான ஹிஜ்றா பொதுச்சந்தை இறைச்சிக்கடை இல. 02 ஏலவே குத்தகை பெற்றவரின் வைப்புத்தொகை 182,959.13 ரூபாவினை மீளளிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**தீர்மானம் 09**

கீழ்வரும் PSDG நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட, வேலைத்திட்டங்களுக்கான மதிப்பீட்டறிக்கைகளை அனுப்பிவைப்பதற்கும், அதனை அந்தந்த பிரதேசத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையங்களுக்கு வழங்கி அமுல்படுத்துவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

## வேலைகளின் விபரங்கள்

01. Treatment Plane Stage - III and Boundary Wall Treatment Plane veeramunai - 04
02. Cladding and Painting for Abdul Majeed Hall
03. Fixing Street Light System

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது சபையில் கணக்கறிக்கைகள் சீர்படுத்தியவுடன் மிகுதியாக வருகின்ற பணத்தை எம்மிடமுள்ள 03 மதிப்பீட்டறிக்கைகளின் வேலைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும். மல்வத்தை நூலக வேலி திருத்தம், S 27 வாய்கால் கல்வெட் திருத்தம், மல்வத்தை சந்தை 7,8,9 கடைகளின் திருத்தம் இதில் மல்வத்தை சந்தையைப் பொறுத்தவரையில் முன் உள்ள இடத்தை மீண்டும் திருத்தி புதிய கட்டடமாக மாற்றுவதற்கு எம்மால் உதவிகள் பெறலாமா? அவ்வாறானால் நாம் யாரை நாட வேண்டும்?

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை சந்தை கடைத்தொகுதி திருத்துவதற்கும் புதிய கட்டடத் தொகுதிக்கான திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கான மதிப்பீட்டறிக்கையை தயாரித்து விட்டு முன்னாள் அமைச்சர் கௌரவ றிசாட் பதியுதீன் அவர்களிடம் தொடர்பு கொண்டு குறைந்தது 05 மில்லியன் நிதியைப் பெற்று ஆரம்ப கட்டட வேலையை முன்னெடுக்கலாம் என்று நினைக்கின்றேன்.
**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை சந்தை கடைகள் சம்பந்தமாக கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறினார். இது சம்பந்தமான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஊர் நலன் விரும்பிகளுடனும் புத்திஜீவிகளுடனும் கலந்துடையாடி செயற்பட்டால் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மல்வத்தையைச் சேர்ந்த 02 கௌரவ உறுப்பினர்கள், சனசமூக நிலையங்களும் உள்ளது அவர்கள் அனைவரையும் உள்வாங்கி ஒரு குழுவை அமைத்து செயற்படுத்தலாம்.

**தீர்மானம் 10**
கணக்காய்வாளரினால் வரவு செலவுத் திட்டத்தை சீர்செய்தவுடன் மல்வத்தை நூலக வேலி திருத்தம், S 27 வாய்கால் கல்வெட் திருத்தம், மல்வத்தை சந்தை 7,8,9 கடைகளின் திருத்தம் போன்ற வேலைகளைச் செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 11**
முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி இராஜாங்க அமைச்சர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் HMM.ஹரீஸ் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கமைவாக, கீழ்வரும் 14 வேலைத்திட்டங்களின் மதிப்பீட்டு அறிக்கைகளை அனுப்பிவைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

## வேலைகளின் விபரங்கள்

01. Const. of Concrete Surfacing to Hijra 5th Road 2nd Cross Road Maddkkalaputharavai
02. Const. of Concrete Surfacing to DS 2nd Cross Road, Block J West – 02, Sammanthurai
03. Const. of Concrete Surfacing to Hilal Puram, Veeramunai – 04, sammanthurai
04. Const. of Concrete Surfacing to Bound Road, Malayadikkiramam, Sammanthurai
05. Const. of Concrete Surfacing to Amparai 4th Cross Lane, Sammanthurai
06. Const. of Concrete Surfacing to Malayadi 2nd Road Cross Lane, Block J East - 01, Sammanthurai
07. Const. of Concrete Surfacing to Malwathai 9th Cross Road, Malayadikkiramam - 02 Sammanthurai
08. Const. of Concrete Surfacing to MAM.Ibrahim Manager Road Malwathai - 03 Sammanthurai

09. Const. of Concrete Surfacing to Seerpathevy Road Malwathai - 01 Sammanthurai
10. Const. of Concrete Surfacing to Puraver Road, Udanga - 02 Sammanthurai
11. Const. of Concrete Surfacing to Iniyar RoaD & Parisal Pillai Lane, Malayadikkiramam - 03 Sammanthurai
12. Const. of Concrete Surfacing to 4th Cross Lane of Mal 3rd Lane Karuwaddukkal. Sammanthurai
13. Const. of Concrete Surfacing to Islamiy Dahuwa College Lane, Karuwaddukkal. - 03 Sammanthurai,
14. Const. of Concrete Surfacing Ennakkayar Road, Kallarichal - 03 Sammanthurai,

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கல்லரிச்சல் பகுதியில் இருந்து பிரதேச செயலகத்திற்கு பல் நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குரிய SP 12 கட்டடத்தை ஏத்தாளக்குள பாடசாலைக்கு அபிவிருத்திக்காக அதற்கே வழங்கும்படி கேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். என்னைப் பொறுத்தவரையில் அவ்விடம் அப்பாடசாலைக்கு பொருத்தமானது. நாம் ஏற்கனவே தீர்மானம் எடுத்துள்ளோம். அதற்கமைய அவர்களுக்கு சிபார்சு செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் பேசிய போது உறுப்பினர்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது சிறப்புரிமை பேணப்பட வேண்டும் என்கின்ற விடயத்தில் மீண்டும் மீண்டும் பிழைகள் இடம்பெறுகின்றது. அதாவது எங்களது உறுப்பினர்களுக்கிடையிலும், உத்தியோகத்தர்களும் அவ்வாறே நடந்துகொள்கின்றனர். அனுமதியற்ற கட்டடங்கள் கட்டுவது, உடைப்பது சம்மந்தமான விடயத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் கூறும் போது கட்டட உரிமையாளர்களிடம் கௌரவ உறுப்பினர்களின் பெயர்களை குறிப்பிட்டுக் கூறி இவர்கள்தான் கூறினார்கள் என்று எங்களைக் காட்டிக் கொடுக்கின்றார்கள். எனவே இவைகளில் கௌரவ தவிசாளர் அவர்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும்.

கௌரவ உறுப்பினர்கள் எனும் போது மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள், தேசியப்பட்டியலில் வந்தவர்கள் என்று வேறாக பார்க்கக்கூடாது. பாராளுமன்றத்திலும் தேசியப்பட்டியலில் வந்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் இவ்வாறு வேறாகப்பார்க்கவில்லை. அதே போன்றே எமது பிரதேச சபையும் சிறிய பாராளுமன்றமாக அமைந்துள்ளது. இவ்விடத்தில் உறுப்பினர்களுக்குரிய கௌரவம் பேணப்பட வேண்டும்.

மேலும் முஸ்லிம் காங்கிறஸ் தலைவரும் முன்னால் அமைச்சருமான கௌரவ பாரானமன்ற உறுப்பினர் றவுப் ஹக்கீம் அவர்களினாலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் கொண்டுவரப்பட்டது. அதேபோல் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் MI.மன்சூர் அவர்களினாலும் அதிகமான அபிவிருத்தித் திட்டங்கள் கொண்டுவரப்பட்டது. இவைகள் பொதுவாக காட்டப்பட வேண்டும். அதனோடு வீதி அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன் மதிப்பீட்டறிக்கைகளை அவ்விடத்தில் வைக்க வேண்டும். இதில் கௌரவ தவிசாளராக நீங்கள் மிகவம் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு வருடமும் முடிந்த பின்பும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தற்போதைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தற்போதைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நசீர் போன்ற வெளியூர் பாராளுமன்ற உறுப்பினர்களினால் எமது ஊருக்கு செய்கின்ற உதவிகளை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். எமது பிரதேச சபைக்கு வரவேண்டிய வேலைத்திட்டங்கள் உள்ளுராட்சி மன்றங்கள் விட்டுக்கொடுத்ததனாலேயே பிரதேச செயலகங்களுக்கு சென்றுள்ளது. இது தொடர்பாக அறிக்கைகளை செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் குறிப்பிட்ட விடயங்கள் அதாவது அரச நிறுவனங்களில் கௌரவ உறுப்பினர்களுக்கு கௌரவம் வழங்கப்படுவதில்லை என்ற பொதுவான முறைப்பாடு. அதே நேரம் இவ்விடயம் பிரதேச சபையில் நடக்குமானால் கௌரவ உறுப்பினர்கள் உடனடியாக என்னிடம் கூறலாம். பிரதேச சபை சட்டத்தின் படி பிரதேச சபையின் நிர்வாகத்தில் கௌரவ தவிசாளருக்கு மாத்திரம்தான் அதிகாரம் உள்ளது. கௌரவ உறுப்பினர்கள் தவிசாளர் மூலமாகவே உத்தியோகத்தர்களுக்கு எதிராகவோ அல்லது நேரடியாகவோ ஆணையிட முடியாது. எனவே நாம் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நாமே புரிந்து கொள்ள வேண்டும். சில இடங்களில் முறன்பாடுகள் வருவதுண்டு. அதாவது கௌரவ உறுப்பினர்களாக இருந்து நேரடியாக வேலைத்திட்டங்களில் ஈடுபட்டால் கொந்தராத்துக் காரர் யார்? கௌரவ உறுப்பினர் யார்? என்கின்ற சந்தேகம் எழலாம். இதனால் நாம் கவனமாக எமது கருத்துக்களை முன்வைக்கின்ற போது ஏதாவது குறைபாடுகள் வந்தால் அதனை என்னிடம் அறிவித்தால் நிச்சயமாக நான் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன். நான் கௌரவ உறுப்பினர்களை எந்த இடத்திலும் தாழ்த்தியோ, வேறுபடுத்தியோ பார்ப்பவன் அல்ல. ஆனால் உங்களது கௌரவத்தை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

எமது அதிகாரங்களை நாம் விட்டுக் கொடுப்பதாக கௌரவ உறுபப்பினர்கள் கூறினார்கள். இது தொடர்பாக பிரதம மந்திரியிடம் நாட்டில் அரசியல் யாப்பை மீறி நடக்கின்றனர் என்று கூறிய போது இது அரசியல் என்று அவர் கூறினார். அதாவது பெரும்பான்மை சபைகள் எதிர்க்கட்சியில் இருப்பதனால் அவர்கள் பிரதேச செயலகங்கள் மூலம் அனைத்து வேலைகளையும் செய்கின்றார்கள். அதனை நாம் சபை தீர்மானமாக எடுத்து தடுக்கலாம். ஆனால் ஊருக்கு வருகின்ற அபிவிருத்தியை நாம் தடைசெய்யக் கூடாது என்பதற்காக சில நிபந்தனைகளை விதித்துள்ளோம். அதன் அடிப்படையிலேயே செயற்படுகின்றனர். நாம் இவைகளை போட்டியாக இல்லாமல் மக்களின் நலனுக்காக என்று செயற்படுகின்ற போது எந்தப் பிரச்சினையும் வராது.

பொது நிறுவனங்களிடம் கௌரவ உறுப்பினர்களின் கௌரவம் மதிக்கப்பட வேண்டும் என்பது பற்றி ஏற்கனவே எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். மீண்டும் உங்களுக்கு கௌரவங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது பற்றி நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அனுப்பி வைப்பேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தவிசாளர் என்ற வகையில் எமது ஊரின் அனைத்து அதிகாரங்களும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் மக்களின் நலனை நோக்கி செயற்படுவதனால் பல விட்டுக் கொடுப்புக்கள் கொடுத்தாலும் கண்டிப்பாக சில விடயங்களுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபை ஒரு வருடத்திற்கு மேலாக இடம்பெறுகின்றது. ஏற்கனவே கைகாட்டிச் சந்திக்கு அருகில் இருக்கின்ற மடுவம் சம்மந்தமாக சில தகவல்கள் தந்த போது தாங்களும் ஆக்கபூரவமான மறுமொழி கிடைக்கப்பெற்றிருந்தாலும் எதுவும் நடைபெறவில்லை.

சென்னல் கிராமத்தில் இருக்கின்ற சனசமூக நிலையக் கட்டடத்தை பிரயோசனப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அஞ்சல் திணைக்களம் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு இருக்கின்றது. அதில் ஒரு பகுதியில் அஞ்சல் நிலையம் செயற்படும் மற்ற பகுதிகளில் Bank Complex கள் உருவாக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றது. இவ்வாறு அமைப்பதற்கு தபால் திணைக்களம் முன்வருகின்றது.

ஆனால் நிலத்தின் உரிமை இல்லாததனால் அது பற்றி எந்த முன்னெடுப்பும் இல்லாது இருக்கின்றது.

சகல நகரங்களிலும் ஒவ்வொரு தூணிலும் மின் விளக்குகள் போடப்பட்டு மிகவும் பிரகாசமாக காட்சியளிக்கின்றது. ஆனால் எமது ஊரில் சில இடங்களில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்தாலும் சில இடங்கள் இருள் சூழ்ந்து காணப்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சபையின் அதிகாரங்கள் என்ன? எமது சபையினால் எவ்வாறான விடயங்களை மேற்கொள்ளலாம் என்ற தெளிவான அறிவுடன் செயற்பட வேண்டும். கௌரவ உறுப்பினர் கூறிய விடயம், அதாவது பழைய மடுவத்தையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது. ஆனால் அதற்கான திட்டமும் உள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. அவை கிடைக்கும் பட்சத்தில் அவ்விடம் அபிவிருத்தி செய்யப்படும்.

சென்னல் கிராம சனசமூக நிலையம் திருத்தப்பட்டு அவர்களிடம் பாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதனை பொதுக்கூட்டங்கள் போன்ற விடயங்களுக்கு உபயோகிக்கின்றனர். மேலும் அதனை நூலகமாக மாற்றுவதற்கு கோரியுள்ளார்கள். அவ்வாறு செய்வதானால் ஆளணி அதிகரிக்க வேண்டும், தளபாடங்களும் கொள்வனவு செய்ய வேண்டும். இவைகளுக்கு எங்கிருந்து வருமானம் பெற வேண்டும் என்பதில் கௌரவ உறுப்பினர்கள் அக்கறை செலுத்த வேண்டும்.

அஞ்சல் அலுவலகத்திற்கும் பிரதேச சபைக்கும் தொடர்புகள் இல்லை. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது கட்டடம் ஒன்று கட்ட வேண்டும் என்று முன்மொழிவு வைத்தும் நடைபெறவில்லை. இம்முறை இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. இவைகள் எமது அதிகாரத்திற்குட்பட்டதல்ல. ஆனால் ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறலாம்.

தெரு லாம்பு பொருத்துவது தொடர்பாக குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் இன்று அரசாங்கம் 10 வீதம் மின்னை மீதப்படுத்தி உபயோகிக்கும் படி குறிப்பிட்டுள்ளது. அதனை சிந்தித்து செயற்பட வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, LSDP கூட்டங்கள் இடம்பெற்று அதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதன் தற்போதய நிலை என்ன? திட்ட முன்மொழிவு நாம் தெரிவு செய்த அடிப்படையில் அனுப்பப்பட்டுள்ளதா?

மல்வத்தை பிரதேசத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைப்பதற்கான கோரிக்கையை முன்னாள் ஆளுனர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புள்ளாஹ் அவர்களிடம் கோரியதற்கமைவாக அவரின் அனுமதியுடன் ஆயுள்வேத வைத்தியசாலை திறப்பதற்குரிய ஏற்பாடு உள்ளது. ஆனால் அதன் நிபந்தனையாக அதற்கான இடம் கேட்டதற்கமைவாக எமது பிரதேச சபைக்குச் சொந்தமான தற்போது பாலர் பாடசாலை அமைந்துள்ள கட்டடத்தில் தற்காலிகமாக அனுமதி வழங்குமாறு சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ம் திகதி சித்திரை விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் ஈஸ்டர் தாக்குதலினால் அவை இடையில் நிறுத்தப்பட்டது. அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பரிசுப் பொருட்கள் உள்ளது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் பரிசினைக் கேட்கின்றனர். எனவே எதிர்வரும் 20ம் திகதி சிறிய நிகழ்வு ஒன்றை நடாத்துவதற்கு தங்களின் அனுமதியைக் கோருகின்றேன்.

எமது வளத்தாப்பிட்டியில் வீட்டுத் திட்டத்தின் கீழ் 62 வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. அதற்கான கல், மண் கொண்டு வருகின்ற டம்ரக் போன்ற பாரிய வாகனங்கள் வருவதனால் கொங்கிறீட் இடப்பட்ட வீதிகள் உடைகின்ற நிலை ஏற்படுகின்றது. இது தொடர்பாக முறையிட்டால்

நாம் வீட்டுத் திட்டத்தை தடை செய்வதாக எமக்கு எதிராக முறைப்பாடுகள் வருகின்றது. எனவே இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

கௌரவ உறுப்பினர் பௌசுள்ளா அவர்கள் புனித ஹஜ் கடமைக்காக செல்கின்றார். அவருக்கு எமது சபை சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

LSDP யிற்கான முன்மொழிவுகள் நாம் தெரிவு செய்ததற்கமைவாகவே முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் அதற்கான நிதி ஒதுக்கீடு வரவில்லை.

கௌரவ உப தவிசாளர் அவர்கள் குறிப்பிட்ட ஆயுள்வேத வைத்தியசாலை கண்டிப்பாக அவ் வளாகத்திற்குள் வர வேண்டும். ஆனால் அங்கு பாலர் பாடசாலை இருப்பதனால் அப் பிரதேசத்தை சேர்ந்த கௌரவ உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைக் குறிப்பிடலாம். ஆனால் கண்டிப்பாக எமது வளாகத்திற்குள் அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலினால் இடையில் விடுபட்டிருந்த சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளை நடாத்தும் படி ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தேன். அதற்கமைவாக 20ம் திகதி அந் நிகழ்வினை நடாத்தலாம்.

**தீர்மானம் 12**

மல்வத்தையில் அமைந்துள்ள எமது சபைக்குச் சொந்தமான பொருத்தமான கட்டடத்தில் ஆயுள் வேத வைத்திய சாலையை தற்காலிகமாக அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**தீர்மானம் 13**

பழைய மார்கட்டில் அமைந்துள்ள சில கடையறை வாடகைக்காரர்கள் ஒப்பந்தத்தை மீறியுள்ளதனால் அவைகளுக்கு மீண்டும் கேள்விமனுக் கோருவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, உடங்கா - 02 இல் பல்கலைக்கழக கிழக்கு வீதியில் அதற்குச் சொந்தமான விடுதியிலும் அதே போன்று அங்குள்ள சிற்றுண்டிச் சாலைகளிலும் இருந்து வெளிவரும் கழிவு நீரை பாதை ஓரத்தில் செலுத்துவதனால் பாரிய சூழல் மாசடைவாக இருக்கின்றது என பொதுமக்கள் முறையிடுகின்றனர். இது குறித்து எமது சபை கவனம் எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

அதே போன்று அதன் அருகில் உள்ள வெற்றுக்காணி தொடர்பாக பலமுறை தீர்மானம் எடுத்துள்ளோம். ஆனால் காணிக்குச் சொந்தக்காரர்கள் இதுவரையும் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்காததனால் எமது சபையினால் வரி அறவிடக்கூடியவாறான விடயத்தை மேற்கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சட்டத்தில் இடம் இருந்தால் தீர்மானம் ஒன்றை எடுத்து நிறைவேற்றலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தங்களது ஆளுமைக்கும், நிர்வாக செயற்பாட்டிற்கும் நாங்கள் யாரும் ஈடுகொடுக்க முடியாது. இருந்தாலும் நீங்கள் செயற்படுத்துகின்ற, அனுமதி அளிக்கின்ற செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் இல்லை என்கின்ற குறைபாடும் இருக்கின்றது. ஏற்கனவே தீர்மானம் எடுக்கப்பட்ட படி அங்காடி வியாபாரிகளுக்கான தொகைகள் தொடர்பாக ஓர் தீர்மானத்தை சபையில் எடுத்துள்ளோம். அத் தீர்மான எல்லைகளை மீறி நடைமுறைப்படுத்தப்படுவதனால் எமக்கும் எமது சபைக்கும் பாரிய அபகீர்த்தியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. அன்மையில் வெளியூரில் இருந்து வந்த மாற்று மதத்தைச் சேர்ந்த ரம்புட்டான் வியாபாரி எமது ஊரில் ரம்புட்டான் வியாபாரம் செய்கின்ற போது அவரிடம் 1200 ரூபா பணம் அறிவிடப்பட்டுள்ளது. அதற்கு முதல் நாள் அதே வியாபாரத்தை சாய்ந்தமருது பிரதேசத்திலே செய்கின்ற போது 200 ரூபா அறிவிடப்பட்டுள்ளது.

நாம் மேற்கொண்ட தீர்மானத்தில் 500 ரூபாவிற்கு மேல் அறவீடுகளை மேற்கொள்ளக் கூடாது என தீர்மானம் எடுத்திருந்தோம். இது தனிப்பட்ட ஒரு நபர் அவருடைய சுக போகத்திற்காக பொதுச் சந்தையை குத்தகையாக எடுத்திருக்கினறவர் எமது ஊருக்கே களங்கம் விளைவிற்கின்ற ரீதியில் பணத்தினை அறவீடு செய்கின்றவர்களின் நடவடிக்கை ஏற்கனவே குற்றங்கள் எதுவும் புரியாமல் குற்றவாளிகளாக கருதப்படும் எமது ஊருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பாக எமது சபையில் திடகாத்திரமான முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

எமது ஊருக்குக் கிடைக்கப் பெற்ற பாரிய அபிவிருத்தித்திட்டம் இன்று எந்தவிதமான முன்னெடுப்புக்களும் இல்லாமல் முடங்கப்பட்டுள்ளது. கடந்த 2017 அம் ஆண்டு நார திட்டமிடல் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் நிதி உதவியினால் செய்யப்பட்ட 03 வீதிகள் எமது ஊரில் 02 வீதிகள் வளத்தாப்பிட்டியில் ஒரு வீதி ஏதோ ஒரு பிரச்சினையினால் முடிவுறாமல் இருக்கின்றது. ஆனால் இன்று வேறு அபிவிருத்தித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போது எங்களால்தான் அவ்வீதிகள் முடக்கப்பட்டுள்ளது என்று மக்கள் வினா எழுப்புகின்றனர். ஏனென்றால் எங்களது துரதிஸ்டவசம் சபை ஆரம்பிப்பதற்கு முன் அவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. நாங்களும் சபைக்கு வந்தபோது அவ்வேலைகள் இடையில் விடப்பட்டுள்ளதனால் அதன் விளக்கம் தெரியாமல் ஊரில் உள்ள பொதுமக்கள் எங்களைக் குறை கூறுகின்ற நிலை ஏற்படுகின்றது.

எனவே அவைகளை ஊரின் அப்விருத்திகள் என கருத்தில் கொண்டு இவ் அபிவிருத்தி எவ்வாறு முடக்கப்பட்டிருக்கின்றது என்பதனை கண்டறிந்து அவ் வேலைகளை துரிதமாகநடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதனை வினயமாக கௌரவ உறுப்பினர்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.மேலும் தாங்கள் நிதி நிலமைகளைச் சுட்டிக்காட்டியிருந்தீர்கள் S27 ஆம் வாய்காலினால் செல்கின்ற கல்வெட்டினால் இன்று மக்களால் செல்ல முடியாத நிலமையாக இருக்கின்றது. அதன் மற்றய பகுதியும் அன்மையில் கனரக வாகனம் செல்லும் போது உடைந்து விட்டது. எனவே முடியுமானால் இதற்கு சபையில் முன்னுரிமை வழங்கி இருக்கின்ற நிதியைப்பயன்படுத்தி அதனை முடித்துத்தந்தால் அப்பிரதேசத்திற்கு மிகவும் உகந்ததாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

இன்று நாம் பல அமர்வுகளில் பேசி முடிவெடுத்த விடயம் அதாவது நேற்று முன்தினம் ஒரு கற்பினித்தாய் வீதியோரத்தில் சென்று கொண்டிருந்த பொது கட்டாக்காலி மாடுகள் ஒன்றை ஒன்று உரசி கற்பினித்தாயில் மோதியதனால் அவர் வீதியில் உள்ள வடிகானுக்குள் விழுந்ததனால் இன்று அம்பாரை வைத்திய சாலையில் கஸ்டமான சூழ்நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். எனவே கட்டாக்காலி மாடுகள் கிராமமப்புறங்களை விட நகர்புறங்களில் அதிகமாக காணப்படுகின்றது. எனவே, அதற்கெதிராக பொலிசாரின் உதவியை நாடியாவது சட்டநடவடிக்கை மேற்கொண்டால் எமது ஊருக்கு செய்கின்ற பாரிய நன்மையாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

எமது ஊரின் ஆரம்பத்திலும் முடிவிலும் இருக்கின்ற பெயர்பலகையில் மாற்றம் கொண்டுவந்து அதனை மாற்றினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் இரவு வேளைகளில் அவை தெளிவாக காட்சியளிக்காமல் உள்ளது. சம்மாந்துறைக்கு வருகின்றபோது அனுபவரீதியாக வருகின்றோமே தவிர பெயர்ப் பலகையைப் பார்த்து வரமுடியாமல் உள்ளது. எனவே இரவு வேளைகளில் அனைவருக்கும் தென்படக்கூடியவாறு அப்பெயர் பலகையை மாற்றினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திறந்தவெளிச் சந்தை தொடர்பாக ஊடகங்களிலும் வந்துள்ளது. இது தொடர்பான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி செயலாளரைப் பணித்துள்ளேன். இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பாதைகளைப் பொறுத்தவரையில் அவைகள் மாகாண சபையினால் செய்யப்பட்டு இன்று ஒரு நிலையில் உள்ளது. மீண்டும் அதற்கு பணம் ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. உள்ளுராட்சி உதவி ஆணையாளரிடம் இருந்து அதற்கான அறிக்கை வரும். மாகாண சபைதான் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாரத்திற்குள் இப் பிரச்சினை தீரலாம்.

கட்டாக்காலி மாடுகளுக்கு ஏற்கனவே பொலிசுடன் பேசி செயலாளருக்கு உடனடியாக செயற்படுத்தும் படி அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

வரவேற்புப் பலகைகள் இரண்டும் மின்விளக்கு எரியும் போது தெரியக்கூடியவாறு போடப்பட்டவைகள். அதன் அளவு போதாது என்று கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் கூறியிருந்தார். தற்போது இருப்பது மிகவும் விலை கூடியது. (125,000/-) அதனைவிட பெரியதாக செய்ய வேண்டுமானால் அதற்கான நிதியை பெற வேண்டும். எனவே நிதிகள் கிடைக்கும் போது செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் ஊடாக ஒப்பந்தம் செய்யப்படுகின்ற வேலைகளில் இருந்து ஒரு தொகுதிப் பணம் சனசமூக நிலையத்திற்காக அறவீடு செய்யப்படுகின்றது. அப் பணத்தினை இவ்வாறான தேவைகளுக்கு பயன்படுத்த முடியுமா? என்ற தெளிவினைத் தந்தால் சிறப்பாக அமையும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சனசமூக நிலையங்கள் சபையின் அந்தந்தப் பகுதிக்குரிய வேலைகளைச் செய்கின்றனர். சனசமூக நிலையத்தின் ஊடாக கொந்தராத்து செய்பவர்கள் ஏதோ ஒரு இடைஞ்சலாகவும் சிலநேரம் பார்க்கப்படுகின்றது. உண்மையில் சகல வேலைகளையும் செய்கின்ற அதிகாரம் சனசமூக நிலையத்திற்கு இருக்கின்றது. சனசமூக நிலையத்தின் வருமானத்தை வைத்து அவர்களது எல்லைக்குள் உள்ள மக்களுக்காக சேவை செய்வதற்காகத்தான் அந் நிலையங்கள் உள்ளது. அதில் உள்ளவர்கள் சபையுடன் இணைந்து தீர்மானம் எடுத்து செயற்படுத்தலாம். இவ்விடயங்களை செயற்படுத்துவதற்காகவே சனசமூக நிலைய உத்தியோகத்தர் இருக்கின்றார். ஆனால் சனசமூக நிலையம் சுயமாக இயங்குவதற்கு சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களாகும். கேள்வி மனு கோராமல் அபிவிருத்தி வேலைகளைச் செய்யக்கூடியவையாக சனசமூக நிலையங்கள் கானப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேச செயலகத்தினால் செய்கின்ற பாதைகள் சம்பந்தமாக பிரதேச சபையிடம் அனுமதி பெறுகின்ற போது அவைகள் எந்தந்த வட்டாரத்திற்குரியது என்பது பற்றி அந்தந்த வட்டார உறுப்பினர்களிடம் தெரியப்படுத்தினால் நாங்களும் முன்மொழிவுகளை

தயாரிக்கின்ற போது அவ்வீதிகளை தவிர்த்து ஏனைய வீதிகளுக்கு முன்மொழிவினை தயாரித்துக் கொள்வதற்கு இலகுவாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வட்டாரத்திற்குரிய உறுப்பினர் எனும் போது மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் உறுப்பினராகவும், பட்டியலில் வந்தவர்கள் உறுப்பினர் இல்லை என்பது போல் தெரிகின்றது. உண்மையில் ஒரு வட்டாரத்திறிகுரிய உறுப்பினர் 1400 வாக்கு எடுத்திருந்தால் அவருக்கு எதிராக 2000 பேர் இருப்பார்கள். இவ்வாறு இருக்கும் போது குறிப்பிட்ட வாக்கு எடுத்ததனால்தான் வட்டாரத்திற்கு உறுப்பினராக வருவார் என்று கூறி ஓர் அமைப்பு வருவதனால் நீங்கள் 07 வட்டாரத்தில் வென்றிருந்தாலும் மொத்தத்தில் 100 வாக்குகள் குறைவு. அதிகமான வாக்குகள் முஸ்லிம் காங்கஸ் பெற்றுள்ளது. எங்களது 7000 வாக்குகளை இணைத்து இவ்வரசாங்கத்தில் இருக்கின்றோம். இதனை தெழிவாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் விளங்க வேண்டும். அதாவது 5000 வாக்குகளுக்கு நாங்கள் 02 பேர் வந்துள்ளோம். சுட்டிக்காட்டி ஒரு வட்டாரத்திற்கு இவர் சொந்தம் என்றால் அவர் வேறு பிரதேசத்தில் எதுவும் செய்ய முடியாது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மலையடிக் கிராமத்தில் வண்டு வீதியில் அமைந்துள்ள கட்டடம் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றேன். இதுவரையும் அதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எனவே அதனை செயற்படுத்த வேண்டும்.

எமது சம்மாந்துறைக்கு கிடைக்கப்பெற்ற நீதி அரசருக்கு கண்டிப்பாக பாதுகாப்பான இடத்தை வழங்குவதற்கு அனைத்து உறுப்பினர்களும் முன்வரவேண்டும். அதற்கு எமது அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள இடம் பொருத்தமானது. கௌரவ உறுப்பினர் கூறியவாறு அங்கு கட்டடம் அமைத்தால் கௌரவ நீதி அரசருக்கான இடத்தையும் வழங்கலாம். எனவே அதற்கும் ஆலோசனைகளை வைப்பதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையில் 30 வருடங்களுக்கு முன்பிருந்த வடிகான்கள் அதிகமானவைகள் மூடப்பட்டுள்ளது. அவ் வடிகாண்களை எமது பிரதேச சபையினால் திறந்து வைத்தால் பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் சபை மாத்திரம் செய்ய வேண்டும் என்றில்லாமல் பொது மக்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதாவது தன்னுடைய வீட்டிற்கு முன்னுள்ள கான்களை அவர்கள் சுத்தமாக வைத்திருந்தால் அனைத்துக் கான்களும் பராமரிக்கப்படும். ஆனால் அவ்வாறு செய்யாமல் அவர்களே அதற்குள் கழிவுகளைக் கொட்டுவிட்டு பிரதேச சபை சுத்தப்படுத்த வேண்டும் என்றால் அதற்கு போதிய ஆளணி இருக்க வேண்டும். ஆளணியைக் கூட்டவேண்டுமானால் அதற்கான வருமானம் இருக்க வேண்டும். இவ்வாறான பல பிரச்சினைகள் இருக்கின்றது. இது தொடர்பாக மக்களும் உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மின் கம்பங்கள் நாட்டப்பட்ட இடங்கள் இடைவெளியாகவே காணப்படுகின்றது. சிலர் அவர்களது வீட்டிற்கு அருகில் இருப்பதனை சீராக்கியுள்ளனர். சில இடங்களில் அவ்வாறே இருக்கின்றது. இதனால் பாதைகளில் செல்வதற்கு இடைஞ்சலாக இருப்பதுடன் மழைகாலங்களில் அவ்விடத்தினூடாக நீர் இடிந்து செல்கின்ற சூழ்நிலையும் ஏற்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது தொடர்பாக நாம் அவர்களுக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் குறிப்பிட்ட கட்டடம் பல் நோக்கு கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான கட்டடம். அதன் பராமரிப்பும், ஆக்கிரமிப்பும் வேறொரு கோணத்தில் செல்கின்றது. எனவே எமது சபைக்குச் சொந்தமான சொத்தினை மிகவும் தீவிரமாக எமது சபைக்குள் உள்வாங்க முடியுமோ நாம் அதனை உறுதியாக உள்வாங்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வண்டு வாய்கால் சந்தியில் அமைந்துள்ள சந்தைக் கட்டடத்தினை சபைக்கு பாரம் கொடுக்கா விட்டாலும் அது சபையின் சொத்தாகவே கருதப்படும். அதனை திருத்தம் செய்து உபயோகிக்க வேண்டும் என்று முடிவெடுத்துள்ளோம். ஆனால் அதில் என்ன செய்வதென்பது ஒரு கேள்வியாக உள்ளது. அதனை சபைக்குள் உள்வாங்கிளால் அதனை பராமரிக்க வேண்டும். எனவே அதனை எந்த சனசமூக நிலையத்திற்கு கொடுக்க வேண்டும் என்றும், அதற்கான முன்மொழிவினையும் சமர்ப்பியுங்கள் பின்னர் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

இந்தவருடம் பதிலீட்டு ஊழியராக கடமையாற்றும் ஒரு நபர் இரவு பகலாக முயற்சித்து 06 மாதத்திற்குள் 40 இலட்சம் ரூபா வருமானத்தை பெற்றுத்தந்துள்ளார். நிச்சயமாக நாம் அவரைப் பாராட்ட வேண்டும். இதே போன்று இன்னும் அதிகமான வருமானங்கள் வரவேண்டி உள்ளது. எனவே அவைகளுக்கு நீங்களும் ஊக்கமளிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் கிராமத்தில் ‘JAICA’ நிறுவனத்தினூடாக செய்யப்பட இருக்கின்ற அபிவிருத்தி வேலைகளுக்காக இணங்காணப்பட்ட வேலைகள் தொடர்பாக பல தடவைகள் பேசப்பட்ட விடயம் மீண்டும் கம்பரலிய வேலைத்திட்டத்தினூடாக செய்யப்படுகின்ற திட்டம் என்னைப் பொறுத்தவரையில் அவை தூர நோக்கத்திற்காக செய்யப்படுகின்ற திட்டமாக இல்லை. ஒட்டு மொத்த பிரதேசத்திற்குரிய நீரும் அதனால்தான் செல்கின்றது. இவர்களுடைய 20 இலட்சம் பெறுமதியான வீதியை அவ்விடத்தில் செப்பனிடுவதனால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. எங்களுடைய அபிவிருத்தியை தடுக்கின்ற முயற்சியாகவே அமைகின்றது.

மிக திட்டமிட்ட முறையில் அதற்கான வடிகான்களை அமைத்துவிட்டுதான் அப்பாதைகளைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எமது சபைக்கு நான் வந்ததில் இருந்து 03 அமைச்சிக்களினூடாக அப்பணங்களை கொண்டு வந்து அவ் வேலைகளைச் செய்வதற்காக அனுமதி கேட்ட போதும் தாங்கள் உறுதியாக பல ஆலோசனைகளை வழங்கியுள்ளீர்கள் அந்நேரம் இதனை திட்டமிட்டு செய்யப்பட வேண்டிய வேலைகள் என்று நான் சந்தோசமடைந்தேன். ஆனால் முதல் தரமாக செய்ய வேண்டிய பாதைகள் அவைதான் ‘JAICA’ நிறுவனத்தின் ஊடாக மீண்டும் செய்யப்பட்டதனால் அப்பாதைகள் செய்யப்படாமல் இருக்கின்றது. ஆகவே அதனை சரியான முறையிலே அவைகள் திட்டமிட்டு செய்யப்பட் வேண்டும் என்பதனை நானும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் சிலர் அவர்களது அரசியலை நடைமுறைப்படுத்துவதற்காக 20 இலட்சம் ரூபா வேலை செய்வதற்கான பிரதேசமல்ல.

எனவே அதற்கு திட்டமிடப்பட்ட முறையில் வீதி பொதுச் சந்தை வரவேண்டிய வீதி அச்சந்தர்ப்பத்தில் அவ்வீதியால் பாரிய வாகனங்கள் செல்லக்கூடிய இடம் அவ்வீதி குறைந்தது 06, 07M வீதியாக மாற்றுவதற்கு தவிசாளர், கிராம சேவகர் இணைந்து கலந்தாலோசித்து மாற்ற வேண்டும் என்று கிராம சேவகரிடம் முன்மொழிந்திருக்கின்றேன். அதற்கான அனுமதி தருவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். எனவே உறுதியாக எமது சபை செய்கின்ற மிகப் பெறுமதியான

காரியம் என்னவென்றால் அப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதுதான். என்னுடைய பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளை சரியாக செய்ய வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருப்பவன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது தொடர்பாக பொறியியலாளரிடம் கூறியபோது அதன் தரத்தைப் பார்த்து செய்ய விடுங்கள் என்று கூறினார். சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.